16.10.2018. S.T.C. No. 122/17 PW-1 Raman

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணத்தின்பேரில் எதிரிதரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி

இந்த வழக்கு தவிர வேறு ஒரு காசோலை வழக்கு ஜான் எட்டி என்பவர் மீது தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்கு எண் தெரியாது. ஜான் எட்டி எனக்கு அபன்கான் மூலம் தான் பழக்கம். நான் ஜான் எட்டியைப் பார்த்துள்ளேன். அவர் எனக்கு அபன்கான் மூலம் தான் பழக்கம். எனக்கு நேரடியாக பழக்கம் கிடையாது. அவரை அவர் கடன் கேட்டு வந்தபோதுதான் பார்த்துள்ளேன். அதற்கு முன்பு நான் அவரை பார்த்ததில்லை. அவருக்கு 70 வயதுக்கு மேல் இருக்கும். வயது குறிப்பாக தெரியாது. அவர் மதுரையில் குடியிருக்கிறார். முகவரி தெரியாது. வழக்கு தாக்கல் செய்ய ஜான் எட்டியின் முகவரியை வழக்கறிஞரிடம் அபன்கான் தான் தெரிவித்தார். ஜான் எட்டியும் இந்த எதிரியும் உறவினர்கள் என்றால் எனக்கு அந்த விபரம் தெரியாது. ஜான் எட்டிக்கு ரூ 3 லட்சம் கடன் கொடுத்தேன். கடன் கொடுத்த தேதி நோட்டை பார்த்தால் தெரியும். ஜான் எட்டியிடம் நான் நேரடியாகச் சென்று பணம் கேட்கவில்லை. அபன்கான் தான் சென்று கேட்டார். அவர்தான் என்னிடம் வங்கியில் பணம் இருப்பதாக கூறினார். அதனால் வசூலுக்கு தாக்கல் செய்தேன். அந்த தேதியை நோட்டை பார்த்தால்தான் கூற இயலும். இந்த 2 காசோலைகளும் ஒரே தேதியில் வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டன என்றும் நான் அதை தாக்கல் செய்யாததால்தான் எனக்கு அந்த தேதி தெரியவில்லை என்று கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. ஜான் எட்டிக்குஎன்னுடைய வீட்டில் வைத்து கடன் கொடுத்தேன். நான், அபன்கான், ஜான்எட்டி ஆகியோர்கள் தான் அப்போது இருந்தோம். எங்கள் வீட்டில் தோட்டத்திற்கு சென்று விட்டார்கள். ஜான்எட்டிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேன். அவர் பதிலறிவிப்பு கொடுத்தார். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியாது. ஜான் எட்டி நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. ஜான் எட்டியின் வழக்கு விசாரணை செய்து வாய்தா ஏற்பட்டுள்ளது. ஜான் எட்டியை எனக்கு யார் என்று தெரியாது என்றும் அபன்கான் அவரை எனக்கு அறிமுகப்படுத்தவில்லை என்றும் அவர் என்னிடம் கடன் எதுவும் வாங்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் ஜான் எட்டிக்கு கடன் கொடுத்ததாக சொல்லும் தேதியில் அவர் இந்த வழக்கு எதிரியின் வீட்டில்தான் குடியிருந்தார் என்றும் அந்த விபரம் எனக்கு தெரியவில்லை என்றும் சொன்னால் அவர் குடியிருந்தது எனக்கு தெரியாது. ஜான் எட்டிக்கு தற்போது 91 வயதாகிறது என்றும் தற்போது அவர் படுத்த படுக்கையாக உள்ளார் என்றும்

சொன்னால் எனக்கு அந்த விபரம் தெரியாது. என்னிடம் கடன் வாங்கும்போது ஆட்டோவில் நல்ல நிலையில் வந்தார். பிறர் உதவியின்றி அவரால் நடக்க முடியாது என்றும் என் வீட்டுக்கு அவர் கடன் வாங்க வரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. ஜான் எட்டி ஒரே ஒரு வாய்தாவிற்குதான் நீதிமன்றத்தில் ஆஜரானார் என்றால் சரிதான். அன்றைய தினம் நானும் வந்திருந்தேன். ஜான் எட்டி ஆஜரான தேதியில் நான் ஆஜராகவில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இநத வழக்கு காசோலையும் ஜான் எட்டி காசோலையும் அபன்கான் எதிரிக்கு கொடுத்த கடனுக்காக பொறுப்பிற்காக கொடுக்கப்பட்ட காசோலைகள் என்றும் அந்தக் கடன் தீர்க்கப்பட்ட பிறகு எதிரியினை பணமோசடி செய்வதற்காக என் மூலமாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எங்கள் ஊரில் நிறைய ராமன் இருப்பதால் நான் கட்டையாக இருப்பதாலும் என்னை கட்டராமன் என்று அழைப்பார்கள். நான் அதிகமாக கட்டபஞ்சாயத்து செய்வதால்தான் என்னை கட்டராமன் என்று அழைக்கிறார்கள் என்றால் சரியல்ல. என் மீது குற்ற வழக்கு எதுவும் இல்லை. எதிரியை எனக்கு யார் என்று தெரியாது என்றும் அபன்கான் எதிரியை எனக்கு அறிமுகப்படுத்தவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எதிரியை அபன்கான் என் வீட்டிற்கு 2 முறை அழைத்து வந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் தான் ஓய்வூதியம் பெறுபவர் என்று ஒருபோதும் கூறியதில்லை என்றால் சரியல்ல. எதிரியின் மகனுக்கும் மகளுக்கும் திருமணம் என்று கூறி எதிரிக்கு நான் கடன் கொடுத்ததாக வழக்கிற்காகபொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதற்கு முன்பே அவர்களுக்கு திருமணமாகிவிட்டது என்றால் அந்த விபரம் எ னக்கு தெரியாது. என்னிடம் அவ்வாறுதான் கூறினார். வழக்கில் காசோலையில் தேதி, ராமன் என்ற பெயர், ஒரு மையினாலும், தொகை எண்ணாலும் எழுத்தாலும் வேறு மையினாலும் எழுதப்பட்டுள்ளது என்றும் வழக்கிற்காக அதனை மறைத்து ஒரே மையினால் எழுதப்பட்டது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கடன் கொடுத்ததாக கூறும் பணத்தினை அபன்கான் மூலமாக எதிரியிடம் கேட்கவில்லை என்றும் அவர் அபன்கான் மூலம் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்ய சொல்லவும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. காசோலை திருப்பப்பட்டவுடன் அது குறித்து செக்கானூரரணி தேவா ஆப்டிக்கல்ஸில் வைத்து கேட்டதாக கூறும் நிகழ்வு நிகழவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. தேவா ஆப்டிக்கல்ஸில் எதிரி அபன்கானுக்கு கொடுக்க வேண்டிய கடன் தொகைக்கு பொறுப்பிற்காக மேற்படி 2 காசோலைகளையும் கொடுப்பதற்காகத்தான் வந்தார் என்றும் அன்றைய தேதியில் நான் அந்த இடத்தில் இல்லை என்றும் சொன்னால்

சரியல்ல. நான் அதனை மறைத்து பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் கடன் வாங்கவில்லை என்றும் காசோலை கொடுக்கவில்லை என்றும் அபன்கானுக்கு கொடுத்த காசோலையை அபன்கான் கடன் தீர்ந்தபின்பு இந்த வழக்கு காசோலையையும் ஜான் எட்டி வழக்கு காசோலையையும் சட்டத்திற்கு புறம்பாக எதிரியிடம் பண மோசடி செய்ய வேண்டும் என்பதற்காக பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. அதனால் இந்த வழக்கை தள்ளுபடி செய்து எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. ம.வி.இல்லை.

/Sd./ Raman

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.

/Sd.. M. Udhayavelavan,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.